**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் (இரணைமடுக் கூறு)-2015**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் - இரணைமடுக் கூறின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2711–எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் உறுப்புரை, II பீ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் மாகாண நீர்பாசனத் திணைக்களம் செயற்திட்டத்தின் இரணைமடுக் கூறின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தண்ணீர் தேக்கி வைத்திருக்கும் இயலளவை அதிகரிப்பதற்கு இரணைமடுக் குளத்தை வலுப்படுத்திப் பெருப்பிப்பதும் யாழ்ப்பாணக் குடாநாட்டு நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கு பெருப்பிக்கப்பட்ட தேக்கத்திலிருந்து மாதாந்தம் 660 ஏக்கர் அடி விடுவிப்பதும் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் இரணைமடுக் கூறின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 2,198.3 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 16.91 மில்லியனானதுடன் அதில் ரூபா 1,753.7 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.49 மில்லியன் அல்லது 79 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 மே 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 2.1. அபிப்பிராயம்

-----------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படாதிருந்த சிவில் வேலைகளுக்கான 03 ஒப்பந்தங்களின் கீழ் ரூபா 167.22 மில்லியன் கூட்டுத்தொகையான செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி நடைமுறை வேலையாக காட்டப்படுவதற்குப் பதிலாக பூர்த்தி செய்யப்பட்ட வேலையாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கிடைத்த நிதிப் பெறுகைகளும் ஏற்பட்ட செலவினங்களும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மீது கிடைத்த நிதிகளினதும் ஏற்பட்ட செலவினங்களினதும் திரண்ட தொகைகளிற்கு பதிலாக ஐந்தொகையில் காட்டப்பட்டமையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மீது கிடைத்த கடன் பெறுகைகளும் ஏற்பட்ட செலவினங்களும் ரூபா 42.71 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 13.49 | 1,753.70 | 172 | 0.97 | 135.56 | 1.31 | 178.26 |
| இலங்கை அரசாங்கம் | 3.42 | 444.60 | 50 | 0.32 | 41.63 | 0.32 | 41.64 |
| | 16.91 | 2,198.30 | 222 | 1.29 | 177.19 | 1.63 | 219.90 |

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நீர் வளங்களை பகிர்தல் தொடர்பில் இரணைமடுப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளிடமிருந்தான பலமான எதிர்ப்புக்கள் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 2,198.30 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 16.91 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்ததிலிருந்து 04 வருடங்களும் 08 மாதங்களும் கடந்த பின்னர் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 219.90 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.63 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிடப்பட்டதற்கமைய, யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான நீரின் பிரதான மூலமொன்றாக இரணைமடுக் குளத்தினை பயன்படுத்துதல் தொடர்பில் இரணைமடுப் பிரதேசத்தில் வாழும் பொது மக்களின் எதிர்ப்புக் காரணமாக 2014 இல் செயற்திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்த் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு உப்பு நீக்கப்பட்ட கடல்நீரிற்கு செயற்திட்ட நடவடிக்கைகளை மாற்றம் செய்வதற்கு அமைச்சரவை 2015 யூலை 15 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானித்திருந்தது. ஆகையால், 2015 பெப்ரவரி மாதத்தில் செயற்திட்ட நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட வேலைகளின் நோக்கெல்லையில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களை கருத்திற்கொள்ளாமல் அணைக்கட்டுக்கள், நீர் வடிகால் மற்றும் மதில் சுவர்கள், பத்திரிப்பு பாதுகாப்பு வேலைகள், புதிய கதிர்வீச்சிலான வாயிற்கதவுகளை வழங்கி நிறுவுதல் மற்றும் நீர் வடிகாலிற்கும் மதகிற்குமான வாயிற் கதவுகள் போன்வற்றின் புனரமைப்புக்கள் மீது 03 பொதிகளின் கீழ் சிவில் வேலைகளிற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட வேலைகளின் நோக்கெல்லை மீளமைக்கப்பட்ட போதிலும் செயற்திட்ட நோக்கங்களின் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்புக்களை நிர்ணயித்து செயற்திட்டக்காலப்பகுதியை மேவுகை செய்து மாதாந்தம், காலாண்டு, அரையாண்டு முதலியன தோறும் நிதி மற்றும் பௌதீக ரீதியான இலக்குகளை உள்ளடக்கி விரிவான விபரமான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் பந்திகளினால் வேண்டப்பட்டவாறு பிரதான கொள்வனவுத் திட்டமொன்றையும் நேர அட்டவணையையும் செயற்திட்டம் தயாரித்திருக்கவில்லை.